## மனிதநேயம்

விடுப்பட்ட இடங்களில் சரியான சொற்களை இணைத்து கதையை முழுமைப்படுத்தவும்.

என் வகுப்புத் தோழர்கள் இருவருடன் நான் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தேன். வழக்கம் போல அன்றும் நாங்கள் மூவரும் பள்ளிக்கு நடந்தே சென்றோம். நாங்கள் பாதசாரிகள். ஆதலால், சாலைப் பாதுகாப்பைக் கடைப்பிடிக்க மறந்ததில்லை.

சாலையைக் கடக்க மேம்பாலத்தைப் பயன்படுத்தினோம். சாலை ஓரத்தில் ஒரு பூனை ______________________ ஓடிக்கொண்டிருந்தது. நடந்து செல்பவர்களின் கால்க்கு நடுவில் நுழைந்து ஓடிக்கொண்டிருந்தது. “இவ்வளவு பரபரப்பான சாலையில் இந்தப் பூனை என்ன ஆக போகிறதோ தெரியவில்லை” என்று கூறிக்கொண்டே ஒரு பெரியவர் எங்களைக் கடந்து சென்றார். அவருடைய வார்த்தையைக் கேட்டு என்னை மிகவும் ____________________ இருந்தது.

இந்த பூனையை எப்படி காப்பாற்றுவது என்று என் நண்பர்களிடம் கேட்டேன். அதற்கு ரவி “எனக்குப் பள்ளிக்குச் செல்ல நேரமாகிவிட்டது” என்று கூறி அவ்விடத்தை விட்டு_____________________. மாலாவோ “எனக்குப் பூனை என்றால் பிடிக்கவே பிடிக்காது” என்றுக் கூறிவிட்டு தூரமாக நின்றாள். அதற்கு மேல் நேரம் தாழ்த்த நான் விரும்பவில்லை. “இந்தப் பூனையைப் பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் சென்று விட்டுவிடுவதான் நல்லது” என்றுக் கூறிப் பூனையைத் தூக்கிக் கொண்டு நடந்தேன்.

வழியில் ஆசிரியர் திரு. இனியனைக் கண்டேன். அவர் பூனையுடன் நான் பள்ளிக்கு வரும் _____________________ கேட்டார். நான் நடந்ததை விளக்கமாக கூறினேன். ஆசிரியர் என்னைப் பாராட்டினார். சபைக்கூடலின்போது மாணவர்களின் முன்னிலையில் என் ________________________ அனைவரும் உதாரணமாக கொள்ள வேண்டும் என்று கூறினார். எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

| | | |
|---|---|---|
| அங்கும் இங்கும் | பதற்றமாக | காரணத்தைக் |
| நகர்ந்தான் | மனிதநேயதை | |

LIVEWORKSHEETS